முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,
முதன்மை சார்பு நீதிபதி.

எ.ம.சா.2 தேதி. 04.08.2025

| MCOP. No. | 73/2020 | | |
|---|---|---|---|
| பெயர் | சதாம் உசேன் | த/பெ, | பிச்சைமுகம்மது |
| வயது | 35 | தொழில் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

**4ம் எதிர்மனுதாரர் தரப்பு முதல் விசாரணை**

நான் நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை பெற்றதன் பேரில் சாட்சியம் அளிக்கின்றேன். 3ம் எதிர்மனுதாரரின் வாகனமான பேருந்தை நான் தான் ஓட்டினேன். இந்த விபத்தானது 2019ல் நடந்தது. மேற்படி பேருந்தில் பயணம் செய்த சரண் என்பவர் அந்த பேருந்தில் கடைசி இருக்கையில் வலதுபுறமாக அமர்ந்து பயணம் செய்தார். அவர் பேருந்திற்கு வெளியே கையை நீட்டிக்கொண்டு உட்கார்த்திருந்தார். நான் எனது பேருந்தின் சைடு மிரரர் வழியாக அதனை பார்த்து அவரை எச்சரிக்கை செய்தேன். முதலில் எச்சரிக்கை செய்ததும் அவரது கையை எடுத்துவிட்டார். பின்னர் வைத்துக்கொண்டார். அவரது கையானது எதிர்புறமாக வந்த TATA ACE வாகனத்தில் மனுதாரரின் கையை இடித்துவிட்டது. மனுதாரர் தனது கையை வெளியே நீட்டாமலும், TATA ACE நெருக்கமாக வராமல் இருந்திருந்தால் இந்த விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான். TATA ACE வாகனத்தின் பாகங்கள் எதுவும் எனது பேருந்தில் இடிக்கவில்லை என்றால் சரிதான். இந்த விபத்தில் எனது குறைபாடு எதுவும் இல்லை என்றால் சரிதான். இந்த விபத்துக்கு காரணம் மனுதாரரும். TATA ACE வாகனமும் தான் என்றால் சரிதான்.

**2ம் எதிர்மனுதாரர்தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்பந்தமாக நானும் எனது பேருந்தின் நடத்துனரும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்டு அபராதம் கட்டிவிட்டோம் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் பேருந்தில் உள்ள பயணிகளுக்கும், எனக்கும், மனுதாரரை தவிர வேறு எந்த நபருக்கும் எந்தவித காயமும் ஏற்படவில்லை. மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் உள்ளபடி எங்கள் பேருந்திற்கு எந்த வித சேதாரமும் ஏற்படவில்லை. மேற்படி டாடா ஏசிம் எங்கள்

பேருந்தும் உரசிக்கொள்ள வில்லை. மனுதாரர் கையை வெளியே நீட்டிக்கொண்டிருந்ததை எனது பேருந்தின் சைடு மிரர்ரில் பார்த்து தெரிந்துகொண்டேன். பின்னர் அவரை நடத்துனர் மூலம் மனுதாரருக்கு எச்சரிக்கையும் விடப்பட்டு அந்த நபர் தனது கையை எடுத்துக்கொண்டார். பின்னர் அவர் மீண்டும் அவ்வாறே கையினை சன்னலுக்கு வெளியே நீட்டியுள்ளார். மறுபடியும் அவ்வாறு அந்த நபர் கையை நீட்டியதை பார்த்து நானும் நடத்துனரும் மேற்படி நபரை இடம் மாற்றி உட்கார வைத்தோ அல்லமது பேருந்திலிருந்தோ இறக்கி விட்டோ சென்றோமா என்றால் கல்லுரி மாணவர்கள் அதிகம் உள்ளதா கடுமையாக எச்சரிக்கை செய்ய முடியவில்லை. மேற்படி விபத்தில் அந்த நபர் தனது கையை வெளியே நீட்டாமல் இருந்திருந்தால் விபத்துஏற்பட வாய்ப்பு இல்லை என்றால் சரிதான்.

மேற்படி விபத்தில் TATA ACEக்கும், எனது பேருந்திற்கும் எந்தவிதமான சேதாரமும் ஏற்படவில்லை எனது இருக்கை அருகில் இருந்த சைடு மிரரருக்கும் எந்த வித சேதாரமும் ஏற்படவில்லை. மேற்படி TATA ACE பேருந்தை விட்டு கணிசமான இடைவெளி விட்டு சென்றது என்றால் சரிதான். மேற்படி விபத்தில் அஜாக்கிரதை என்பது மனுதாரர் செய்த காரியம் தான். மோட்டார் வாகன விதிகளின் படி படிகளில் தொற்றிக்கொண்டு வந்தாலும், படிகளில் தொங்கிக்கொண்டு வந்தாலும். சன்னலில் கைகளை நீட்டி சென்றாலோ, பேருந்தின் கூரைகளின் மீது ஏறினாலோ அதனை தடுத்து கட்டுகோப்புடன் பேருந்தை செலுத்தவேண்டியது மோட்டார் வாகன விதிகளின் படி நடத்துனர் மற்றும் ஓட்டுனரின் கடமை என்றால் சரிதான். இரண்டாவது முறை மனுதாரர் பேருந்தை விட்டு கையை வெளியே நீட்டும் பொழுது நானோ பேருந்தின் நடத்துனரே அந்த மனுதாரரை வேறு இருக்கைக்கு மாற்றி உட்கார வைத்திருந்தால் மேற்படி விபத்தை தடுத்திருக்கலாம் என்றால் நாங்கள் கூறினாலும் அதனை கேட்கும் மனநிலையில் மனுதாரர் இல்லை. மேற்படி மனுதாரருக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்றால் எங்கள் கவனக்குறைவு இருந்ததால் எங்கள் பேருந்தின் காப்பீட்டு நிறுவனமான 4ம் எதிர்மனுதாரர் தான நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்றால் சரிதான்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-**

09.03.2020 ஆம் தேதி நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் நீதிமன்றத்தில் குற்றத்தை வினவியபோது முதல் விசாரணையில் கூறிய

சங்கதிகளை நான் கூறவில்லை என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் நான் கூறிய மனுதாரர் பேருந்தில் வெளியே கையை நீட்டியதாக கூறியுள்ள சங்கதியை முதல் முறையாக நீதிமன்றத்தில் எனது தரப்பு வழக்கறிஞர் சொல்லிக்கொடுத்து நான் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. குற்றவியல் நீதிமன்றத்தில் நான் மனுதாரர் தனது கையை நீட்டியதையும் அதற்கு அவரை எச்சரிக்கை செய்ததையும் அப்போது கூறவில்லை தற்போது தான் முதல் முறையாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தில் ஈடுபட்ட பேருந்தை எந்த தேதியில் மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தினேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்த தேதியில் நான் ஆய்வுக்கு உட்படுத்தவில்லை என்றாலும், அதற்கு அடுத்த இரண்டு நாட்கள் கழித்து ஆய்வுக்கு உட்படுத்தினேன் என்றால் அன்றைய தினமே காவல் நிலையத்தாரால் பேருந்தை எடுத்துச்சென்றுவிட்டார்கள். இரண்டு நாட்கள் கழித்து தான் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. நான் கவனக்குறைவாகவும், அலட்சியமாகவும், பொறுப்பற்ற தன்மையுடனும் பேருந்தை இயக்கினேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.